# நவீன வக்ஃப் நடைமுறைகளில் சுகூக் வக்ஃப் பற்றிய ஓர் சட்டவியல் நோக்கு

# An Islamic Law Perspective on The *Sukuk Waqf* in Modern Waqf Practices

A.J.M. Aslam[1] , M.R.J. Suhaima[2] , A.M.F. Sharmina[3] & I. Saujan[4]

[1,2,3&4]*Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*
*ajmaslam345@gmail.com*

***ABSTRACT***

*The practice of Waqf is seen as an important economic factor that plays a role in the progress of society. In the modern world, there have been many new changes in its practice. In that way, this research has been carried out with the aim of considering the Islamic practice related to Sukuk Waqf which can be seen as one of the modern types of Waqf. This qualitative study is based on a review of previous literature. In that way, the data for this analysis was directly obtained from sources of Islamic jurisprudence such as Al-Qur'an and Sunnah. In addition to these, secondary data were obtained from Islamic history books, previous studies, internet articles, magazines etc. Information related to waqf and sukuk waqf obtained through secondary data has been collected and analyzed in a synthesis method and the results have been presented. According to them, when called Sukuk it stands for proof of ownership. It can be observed that its implementation is being used more and more in Muslim countries globally. Also, in this study, several sections of Sukuk Waqf have been discussed and results have been presented. This study can be support for the studies that can be carried out in relation to Islamic economics and Waqf.*

**Keywords:** *Waqf, Sukuk-Waqf, Principle of Waqf in Islam, Voluntary Charity*

**ஆய்வுச் சுருக்கம்**

வக்ஃப் நடைமுறை சமூகத்தின் முன்னேற்றத்தில் பங்கு வகிக்கும் முக்கியமான பொருளாதாரக் காரணியாகக் காணப்படுகிறது. நவீன உலகில் இதன் நடைமுறையில் பல்வேறு புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது. அந்த வகையில் வக்ஃபின் நவீன வகைகளில் ஒன்றான சுகூக் வக்ஃப் பற்றிய இஸ்லாமிய சட்டவியல் நடைமுறையை பரிசீலிக்கும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்பு ரீதியிலமைந்த இவ்வாய்வானது முன்னைய இலக்கியங்களின் மீதான மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வுக்கான தரவுகள் நேரடியாக இஸ்லாமிய சட்டவியல் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா போன்ற மூலங்களில் இருந்து பெறப்பட்டதுடன், இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலைத் தரவுகளான முன்னைய ஆய்வுகள், இணையக் கட்டுரைகள், இஸ்லாமிய வரலாற்றுப் புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளின் மூலம் கிடைக்கப் பெற்ற வக்ஃப் மற்றும் சுகூக் வக்ஃப் தொடர்பான தகவல்கள் தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வின் கண்டறிதல்களுக்கமைய, சுகூக் எனும் செற்பிரயோகம் உரிமைக்கான சான்றினை குறித்து

*நிற்கின்றது. குறித்த வக்ஃப் நடைமுறைக்கு இஸ்லாமிய சட்டவியல் அனுமதி வழங்கியுள்ளதுடன், தற்கால உலகில் பல முஸ்லிம் நாடுகள் குறித்த வக்ஃப் நடைமுறையை பிரயோகித்து வருகின்றது. அத்தோடு இவ்வாய்வில் சுகூக் வக்ஃபின் பிரிவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு அவற்றின் ஷரீஆ நிலை தனித்தனியே முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவுகள் எதிர்காலத்தில் நவீன வக்ஃப் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ள ஆய்வாளர்களுக்கு உதவியாக அமையவல்லது.*

***திறவுச் சொற்கள்:*** *வக்ஃப், சுகூக் வக்ஃப், இஸ்லாமிய கண்ணோட்டம், நிலையான தர்மம்*

---

***அறிமுகம்***

*சமூகத்தில் பொருளாதாரச் சமநிலையையும், சுழற்ச்சியையும் ஏற்படுத்தும் நோக்கில் இஸ்லாம் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றில் ஸதகா, ஸகாத், வக்ஃப், அன்பளிப்பு, கப்பாரா மற்றும் வஸிய்யா போன்றன (Saujan & Mazahir, 2021). வக்ஃப் நடைமுறையானது இஸ்லாத்துக்கு முற்பட்ட பண்டைய மொசபத்தேமியா, கிரேக்க, அரேபிய நாகரிகங்களின் இருந்து வந்த ஒரு நடைமுறையாகும். இது அந்தந்த நாகரீகங்களால் வேவ்வேறு பெயர்களில் அறியப்பட்டு வந்துள்ளது (Saujan & Mazahir, 2022).இஸ்லாத்தின் வருகையின் பின் குறித்த நடைமுறை ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் பிற்பட்ட காலங்களில் வக்ஃப் சொத்துக்கள் முறையாக பராமறிக்கப்படாமை, இஸ்லாமிய நாடுகள் காலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்டமை, வக்ஃப் நடைமுறைக்கு எதிராக பல சட்டங்கள் ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டமை, இஸ்லாமிய ஆட்சியாளர்கள் தமது சொந்த சொத்துக்களாக பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தியமை போன்ற காரணங்களால் வக்ஃப் வீழ்ச்சியை நோக்கிச் சென்றது (Nurwinsyah & Herianingrum, 2017). சமூகத்தில் வக்ஃப் வீழ்ச்சியடைந்தமையால் உலக முஸ்லிம் நாடுகளின் பொருளாதார வீழ்ச்சி, கல்வியறிவின்மை, சுகாதாரம் வசதியின்மை, வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமை போன்ற பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. இந்நிலையிலிருந்து முஸ்லிம் நாடுகளையும், சமூகத்தையும் மீட்டெடுப்பதற்காக கொள்கை வகுப்பாளர்களும், ஆய்வாளர்களும் வக்ஃபின் நவீன பிரயோகங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர் (Lahsen, 2018 ).*

*வக்ஃப் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தில் பங்கு வகிக்கும் ஓர் முக்கிய பொருளாதார மூலமாகச் செயற்பட்டு வந்துள்ளது. முஹம்மத் நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அவர்களது தோழர்களான ஸஹாபாக்களது கால கட்டத்திலும் அதன் பின்னர் இஸ்லாமிய கலீபாக்களின் கால கட்டத்திலும் ஒரு முஸ்லிமின் வாழ்வில் வக்ஃபானது ஓர் முக்கிய பகுதியாகக் காணப்பட்டது. அன்றைய கால கட்டத்திலே பல்வேறு சொத்துக்கள் அரசர்களாலும், செல்வந்தர்களினாலும் சமூகத்தின் நன்மைக்காக வக்ஃப் செய்யப்பட்டது (Saujan, 2022).*

*வக்ஃப் ஆனது முஸ்லிம் உம்மத்தின் சாதனைகளில் ஒன்றாக மேற்கத்தேய ஆய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. அல் குர்ஆனிய வசனங்கள் தொண்டு செய்யுங்கள் நல்ல செயல்களில் ஈடுபடுங்கள்; அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள் என்று*

வலியுறுத்துவதனூடாக வக்ஃபிற்கு வழிவகுத்துள்ளது. அதே போன்று நபி (ஸல்) அவர்களும் தனது வாழ்வில் வக்ஃப் வழங்குவதை நடைமுறைப்படுத்தியதுடன் ஸகாபாக்களுக்கும் வக்ஃப் செய்யுமாறு ஊக்குவித்துள்ளார்கள். வக்ஃப் நிறுவனமானது கடந்த கால முஸ்லிம் சமூகங்கத்தின் பொருளாதார பிரச்சினைகளின் வரம்பை முறையாக நிவர்த்தி செய்வதில் ஓர் கருவியாகச் செயற்பட்டுள்ளது. சமகால பொருளாதார வல்லுனர்கள் இன்றைய கால கட்டத்திலும் வக்ஃப் நிறுவனம் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்புடையாதாகக் காணப்படுகிறது என்று வாதிடுகின்றனர் *(Hussein, 2017).*

ஆனால் இன்றைய சூழலில் இந்த வக்ஃப் நிறுவனங்கள் கணிசமான அளவு வளர்ச்சியடையாது காணப்படுகின்றன. நவீன உலகில் இதன் நடைமுறையில் பல்வேறு புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் வக்ஃபின் நவீன வகைகளில் ஒன்றாக காணப்படக் கூடிய சுகூக் வக்ஃப் தொடர்பான இஸ்லாமிய நடைமுறையை பரிசீலிப்பதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

1. வக்ஃப் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தைக் கண்டறிதல்.
2. சுகூக் வக்ஃப் தொடர்பான இஸ்லாமிய நடைமுறையை பரிசீலித்தல்.

**ஆய்வு முறைமை**

பண்புரீதியில் அமைந்த இவ்வாய்வுக்கான தரவுகள் நேரடியாக இஸ்லாமிய சட்டவியல் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா போன்ற மூலங்களில் இருந்து பெறப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலைத் தரவுகளாக இஸ்லாமிய வரலாற்றுப் புத்தகங்கள், முன்னைய ஆய்வுகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்தும் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் விபரன முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றிக்கு மேலதிகமாக முன்னைய இலக்கியங்களில் இருந்து பெறப்பட்ட நேரடி மேற்கோள்கள், சொற்றொடர்கள், உசாத்துணைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் முக்கியத்துவம்**

சுகூக் வக்ஃபானது உலகளாவிய ரீதியில் முஸ்லிம் நாடுகளில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சுகூக் வக்ஃப் இன் நடைமுறை நவீன உலகில் அதன் செயன்முறைகள் முஸ்லிம்களின் நலனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் பங்களிப்பினை வழங்கி வருகின்றன. சுகூகின் வளர்ச்சியும், வக்ஃபின் தனித்தன்மையும் ஒருங்கிணைக்கப்படுவது இஸ்லாமிய நிதித்துறையின் ஒரு பாரிய வளர்ச்சியாகும். இந்த இரண்டு சக்திவாய்ந்த இஸ்லாமிய நிதிக் கருவிகளும் நாட்டின் பொருளாதாரத்தினை வளப்படுத்தும் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்வதற்கான ஒரு பயனுள்ள கருவியாக இணைக்கப்படுகின்றது. மேலும் சுகூக் வக்ஃப் வருமானத்தை உருவாக்குவதற்கும், உற்பத்திச் செயல்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கும் திறனைக்

கொண்டுள்ளது. இதன் மூலம் வருமானம் அல்லது இலாபம் எதிர்கால நிதிக்காகத் தக்கவைக்கப்படுகின்றது. எனவே சுகூக் வக்ஃப் இன் நடைமுறை, அதன் வடிவங்கள், நலன்கள் குறித்து கலந்துரையாடுகின்றது என்ற வகையில் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது. மேலும் இவ்வாய்வானது இஸ்லாமிய பொருளாதரம் தொடர்பாகவும் வக்ஃப் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படக் கூடிய ஆய்வுகளுக்கு உறுதுணையாக அமையவல்லது.

**இலக்கிய மீளாய்வு**

*"Sukuk-Waqf: The Islamic Solution For Public Finance Deficits* எனும் தலைப்பில் *L. Oubdia* மற்றும் *A. Raghibib (2018)* ஆகியோரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது மக்களின் பொதுச் செலவினங்களை நிலைநிறுத்துவதில் சுகூக் வக்ஃபின் பங்களிப்பு குறித்து ஆய்வு செய்கின்றது. மேலும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பண வக்ஃப் மற்றும் சுகூக் வக்ஃப் இன் நடைமுறை, நவீன உலகில் அதன் செயன்முறைகள், முஸ்லிம்களின் நலனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் அதன் தேவைப்பாடு குறித்தும் கலந்துரையாடுகின்றது. எனவே இவ்வாய்விலிருந்து தலைப்புடன் தொடர்பான விடயப்பரப்புக்குத் தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த ஆய்வு இவ்வாய்விலிருந்து நோக்கம், ஆய்வுப்பரப்பு போன்ற விடயங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

*Waqf-Sukuk, Enhancing the Islamic Finance for Economic Sustainability in Higher Education Institutions* எனும் தலைப்பில் *K. Musari (2016)* என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது சுகூகின் வளர்ச்சியும், வக்ஃபின் தனித்தன்மையும் ஒருங்கிணைக்கப்படுவது இஸ்லாமிய நிதித்துறையில் ஒரு சுவாரஸ்யமான வளர்ச்சி எனவும் இந்த இரண்டு சக்திவாய்ந்த இஸ்லாமிய நிதிக் கருவிகளும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்வதற்கான ஒரு பயனுள்ள கருவியாக இணைக்கப்படலாம் என்றும் நம்பப்படுகின்றது. மேலும் சுகூக் வக்ஃப் வருமானத்தை உருவாக்குவதற்கும், உற்பத்திச் செயல்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கும் திறனைக் கொண்டுள்ளது எனவும் இதன் மூலம் வருமானம் அல்லது இலாபம் எதிர்கால நிதிக்காகத் தக்கவைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உலக நாடுகளான சவுதி அரேபியா, சிங்கப்பூர் மற்றும் நியூசிலாந்தில் வக்ஃப்-சுகூக்கின் சிறந்த நடைமுறையையும் விவரித்துள்ளது. குறித்த ஆய்வு இவ்வாய்விலிருந்து நோக்கம், ஆய்வுப்பரப்பு, தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, முறையியல் போன்ற விடயங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

*"Management of Waqf Properties: A Case Study in Sri Lanka"* எனும் தலைப்பில் *M.T.F. Bushra, S.M.M. Mazahir, M.M.A. Abdullah, S.M.M. Nafees (2021)* ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு வக்ஃபு சொத்துக்களை நிர்வகிப்பதில் எழும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளை ஆராய்வதோடு வக்ஃபு சொத்துக்களை நிர்வகிப்பதில் ஏற்படுகின்ற குறைபாடுகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. இதில் போதிய திறமையான மனித வளமின்மை, வக்ஃபு சொத்துக்களை முறையாக பயன்படுத்தாமை, வக்ஃபு பற்றிய சமூகத்தின் விழிப்புணர்வின்மை என்பன குறைபாடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. வக்ஃபு சொத்துக்களின் முறையான நிர்வாகம் சமூகத்தின் அனைத்து தேவைகளையும் கணிசமான அளவிற்கு பூர்த்தி செய்ய போதுமானதாக இருக்கும் என்பது இவ்வாய்வின் முன்மொழிவாகும்.

இவ்வாய்விலிருந்து ஆய்வுடன் தொடர்புடைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. குறித்த ஆய்வு இவ்வாய்விலிருந்து நோக்கம், ஆய்வுப்பரப்பு, தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, முறையியல் போன்ற விடயங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

*"இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கும் இலங்கையில் அதன் நடைமுறையும்" எனும் தலைப்பில் A.M. Aashiq (2019) என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது இஸ்லாம் வறுமையை ஒழிப்பதற்காகவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஸகாத் வழங்கல், ஸதகா செய்தல், அன்பளிப்பு வழங்கல், வஸிய்யத் செய்தல், வாரிசுரிமைப் பகிர்வு, குற்றப்பரிகாரம் வழங்கல், நஷ்டஈடு கொடுத்தல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற இன்னோரன்ன வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது எனவும் அந்த முறைமைகளுள் வக்பு செய்தல் என்பது அதி முக்கியத்துவம் பெறும் ஒன்;றாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் வக்பு பற்றிய அறிமுகம், இஸ்லாத்தில் அதன் சட்ட திட்டங்கள், அதற்கான ஆதாரங்கள், அவற்றின் வகைகள் மற்றும் அது தொடர்பான நவீன காலப் பிரச்சினைகளும், அவற்றிற்கான தீர்வுகள் பற்றியும் இலங்கையில் அதன் நடைமுறை எவ்வாறு காணப்படுகிறது, அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் போன்றவற்றை இஸ்லாமிய ஷரீஆவின் பின்னணியில் இருந்து இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. எனவே இவ்வாய்விலிருந்து தலைப்புடன் தொடர்பான விடயப்பரப்புக்குத் தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.*

*"Towards the Creation of Strong Brand Image of Waqf Institutions" எனும் தலைப்பில் S.I.Abdullahi (2021) என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் சமகாலத்தில் வக்ஃப் துறை எதிர்கொள்ளும் சவால்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் வக்ஃபின் பல நூற்றாண்டுகள் பழமையான நடைமுறைகள் மற்றும் மேலாண்மை நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ள இயலுமான அமைப்பில் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உலக நாடுகளில் கூட்டு வக்ஃப் நடைமுறையை மேம்படுத்துவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதையும் இவ்வாய்வு தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாய்வு ஆய்வு முறையியல், நோக்கம், தலைப்பு போன்ற விடயங்களில் வேறுபட்டுள்ள போதிலும் ஆய்வுடன் தொடர்புடைய சில தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.*

***நவீன வக்ஃப் நடைமுறைகளில் சுகூக் வக்ஃப் பற்றிய ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு***

***01.வக்ப் பற்றிய இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் கருத்துக்கள்***

*சொற்பிறப்பியல் ரீதியாக, வக்ஃப் என்பது "வகப" என்பதிலிருந்து உருவானது. லிசான் அல் அரப் அகராதியில் "ஹபஸ" என்ற சொற்றொடருக்கு 'அவரைத் தடுத்து வைத்துள்ளார்' என்று பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது. வஹ்பதுஸ் ஸுஹைலி என்ற அறிஞர் வக்ஃப் என்பதை வரையறுக்கும் போது, "வக்ஃப் என்பது ஓர் பொருளாகும். அல்லது பொருளில் குறைவுகளின்றி அதைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு பொருளை தடுத்து வைத்திருப்பதாகும்" என்று குறிப்பிடுகின்றார். வக்ஃப் பொருளைக் குறைக்காமல் வக்ஃப் சொத்தை உற்பத்தி ரீதியாகப் பயன்படுத்தலாம் என்பதை இதன் மூலம் புரிந்துக் கொள்ளலாம். முஹம்மது முஸ்தபா எனும் மாலிகி அறிஞர்,*

*“வக்ஃப் என்பது சட்டபூர்வமாகச் செயல்படுவதைத் தடுக்கும் சொத்து" என்று வரையறுக்கிறார். இன்னும் விரிவாக நோக்கினால் வக்ஃப் என்பது, “வக்ஃப் சொத்தை விற்பது, வக்ஃப் ஆன சொத்துக்கான மானியங்கள் போன்ற சட்ட நடவடிக்கைகளில் இருந்து தடுத்து நிறுத்துவது. மேலும் வக்ஃப் சொத்தை உரிமையில் வைத்திருக்க வேண்டும். நன்மையான நோக்கங்களுக்காக அதனைப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஸலபி என்ற அறிஞர் விளக்கியுள்ளார் (Yunita, 2021).*

*மன்ஸுர் கஃப் என்ற அறிஞரின் கூற்றுப்படி, வக்ஃப் மற்றும் ஹப்ஸ் என்ற வார்த்தைகள் எதையாவது உட்கொள்வதைத் தடுப்பதாகும். வக்ஃபை இன்னும் விரிவாக விளக்கும் போது, சொத்தை என்றென்றும் அல்லது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நிறுத்தி வைக்கும் ஒப்பந்தமானது, பொதுவான மற்றும்  நல்ல நோக்கங்களுக்காக சொத்து மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதை குறித்து நிற்கிறது. மேலும் நூரோடின் உஸ்மான் மேற்கோள் காட்டியுள்ளதற்கமைய, “வக்ஃப் சொத்துக்களை வைத்திருப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் அல்லாஹ்வின் பாதையில் நன்மைகளை விநியோகிக்கின்ற ஒரு ஒப்பந்தமாகும்” என வரையறுக்கிறார். இது அதன் பலன்களின் அடிப்படையில், வக்ஃப் கைரி, வக்ஃப் அஹ்லி அல்லது உஸ்ரி மற்றும் வக்ஃப் முஸ்தரக்  என மூன்றுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது (Syamsuri et al,. 2021).*

*மூன்றும் வெவ்வேறு பயன்கள், வெவ்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன. அறக்கட்டளை வக்ஃப் அல்லது கைரி என்பது வக்பை நிறுவனங்களுக்காக அல்லது அது ஒரு நிறுவப்பட்ட இடத்தில் பொது தொண்டு நிறுவனங்களின் சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட செயன்முறையாகும். இந்த வக்ஃப் என்பது இபாதத்தாகக் கருதி அதிக நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அதாவது இடங்களை நிர்மாணித்தல் அல்லது பராமரிப்பது போன்றவை வணக்க வழிபாடு மற்றும் பிற சமய நடவடிக்கைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டவைகளாகும்.*

*வக்ஃப் அஹ்லி அல்லது ஸுர்ரி என்பது வக்ஃப் நிறுவனர் தனக்காகவோ அல்லது அவரது குடும்பத்தினருக்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபருக்காகவோ அர்ப்பணிக்கின்ற ஒரு வகை வக்ஃப் ஆகும். எடுத்துக்காட்டாக, குழந்தைகளுக்கான வக்ஃப், பேரக்குழந்தைகள் மற்றும் பிற உறவினர்களுக்கான வக்ஃப் ஆகும். இதற்கிடையில், முஷ்தரக் வக்ஃப் என்பது இரண்டின் கலவையாகும், அதாவது வக்ஃப், இது தொண்டு நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்கும் வாகிஃப் தனது சொத்துக்களை அர்ப்பணிப்பதாகும் (Karim, n.d.).*

***02. வக்ஃப் சொத்துக்களை மேம்படுத்துவதற்கான நவீன வழிமுறைகள்***

*சமகாலத்தில் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் வக்ஃப் என்பது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு அம்சமாகும். இதன் ஒவ்வொரு முறையும் தனித்துவமான பலம் கொண்டதும், பங்களிப்புக் கொண்டதுமாகும் (Aashiq, 2019).  திட்டமிடப்பட்ட ஒரு குறித்த செயற்பாடிற்கு பணம் வசூலிப்பதற்காக பல்வேறு சான்றிதழ்களைக் கொண்ட நடைமுறையே பண வக்ஃப் மற்றும் சுகூக் வக்ஃப் ஆகும். இங்கு வெளியிடப்படும் சான்றிதழானது தனிநபர்களாலும், நிறுவனங்களாலும் வரையப்பட்ட திட்டத்திற்கான நிதிக்காக வாங்கப்படும் (Cizaka, 2015).*

***03. சுகூக் வக்ஃப் ( Sukuk Waqf)***

*சுகூக் வக்ஃப் இன் தோற்றமானது பாரம்பரிய இஸ்லாமிய காலகட்டத்திலேயே அறியப்பட்டதாக உள்ளது. இது "ஸக்" என்பதன் ஒருமைப் பதமாகும். சுகூக் என்பது ஒரு இஸ்லாமிய நிதிச் சான்றிதழாகும். இது மேற்கத்தேய வங்கிகளில் பயன்படுத்தப்படும் நிதிப் பத்திர (Bonds) செயற்பாட்டிற்கு ஒப்பானதாகும். இது இஸ்லாமிய ஷரீஆவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நடைமுறையாகும். பாரம்பரிய மேற்கத்தேய வட்டி செலுத்தும் பத்திர அமைப்பானது (Bond Certificate) அனுமதிக்கப்படாததால் சுகூக் வழங்குபவர் அடிப்படையில் முதலீட்டாளர் குழுவிற்கு ஒரு சான்றிதழை விற்றுப் பின்னர் நேரடியான பகுதி உரிமம் கொண்ட ஒரு சொத்தை வாங்குவதற்குத் தகுதி பெறுவார். 2000 ஆம் ஆண்டு மலேசியாவில் சுகூகக் தயாரிப்புகள் வெளியிடப்பட்டதில் இருந்து இன்று வரை மிகவும் பிரபலமாகி வருவதுடன், உலகளாவிய நிலையான பொருளாதார சந்தையில் அதிகரித்து வரும் பங்குகளில் சுகூக் செல்வாக்குச் செலுத்தியும் வருகின்றது (Gandi, 2022).*

*இது வர்த்தக மற்றும் ஏனைய வணிக செயல்களில் இருந்து வேறுபடும் நிதிக் கடமைகளைக் குறித்து நிற்கிறது. இதனைப் பின்வரும் அல் குர்ஆன் வசனத்தின் ஊடாகப் புரிந்து கொள்ள முடியும். "விசுவாசம் கொண்டோரே! நீங்கள் ஒரு குறிப்பிட்ட தவணை வரை ஒருவருக்கு ஒருவர் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டால் அதை எழுதிக்கொள்ளுங்கள். இது அல்லாஹ்விடத்தில் மிக்க நீதியானதும், நீங்கள் சந்தேகிக்காமல் இருப்பதற்கு மிக்க நெருக்கமானதுமாகும்." (அல் குர்ஆன், 2: 282).*
*சர்வதேச இஸ்லாமிய பிக்ஹ் நிறுவனம் (The International Islamic Fiqh Academy) 1988 இல் சுகூக் வக்ஃப் தொடர்பான அறிக்கையின் போது ஏதாவது சொத்துக்களின் சேர்மானம் ஆனது (அல்லது சொத்தின் பிரயோசனத்தை பெறும் உரிமையானது) எழுதப்பட்ட நிதி மூலக் கருவியாக இருக்க முடியும். இது வழங்கப்பட்ட சந்தை விலையில் விற்கப்பட முடியுமானதாக இருக்கும். பெரும்பாலான உறுதிமிக்க சொத்துக்களைக் கொண்டிருப்பதே சுகூக் இனால் குறித்துக் காட்டப்படுகிறது.*

*AAOIFI (The Accounting And Auditing Organization For Islamic Financial Institution ) இன் வரைவிலக்கணத்தின் படி, "சுகூக் என்பது ஒரு உறுதியான சொத்தின் அல்லது சேவையின் முழு உரிமையை குறித்து நிற்கும் மற்றும் ஒரு சொத்தின் பிரயோசனத்தை உரித்துக் கொள்ளும் (ரளரகசரஉவ) ஒரு பத்திரம் அல்லது சான்றிதழ் ஆகும்".*

*எனவே பொதுவான அடிப்படையில் சுகூக் என்பதை இஸ்லாமிய அடிப்படையிலான சான்றிதழ்கள் அல்லது பத்திரங்கள் எனலாம். வியாபார நடவடிக்கைகளின் மூலம் ஏற்படக்கூடிய நிதி ரீதியான கடமைகளுக்கு பதிலளிக்கும் சான்றிதழாகும். இஸ்லாமிய ஒப்பந்தங்களின் அடிப்படையில் சுகூக் ஆனது பல வகைகளில் காணப்படுகிறது உதாரணமாக, முராபஹா, முஷாரகாஇ வகாலா மற்றும் சலம் (Lahesanoubdi, 2018).*


ISBN: 978-624-5736-55-3

***வக்ஃப் மற்றும் சுகூக் இடையிலான தொடர்பு***

*சுகூக் என்பது உரிமைக்கான சான்று ஆகும். அதே சமயம் இந்தோனேஷிய உலமா கவுன்சில் இன் பத்வாவின் படி சுகூக் என்பது ஷரீஆ விதிகளின் அடிப்படையில் (Islamic Bond Holders) வழங்குனர்களால் வழங்கப்படுகின்ற நீண்டகாலத்திற்கு செல்லுபடியாகின்ற பெறுமதிமிக்க ஓர் ஆவணம் ஆகும்.*

*சுகூக் ஆனது சொத்துக்களின் உரிமத்தை காட்டுவதோடு சுகூகிலுள்ள உரிமை கோரல் பணத்துக்கு எதிரான உரிமை கோரல் அல்ல. எனினும் சொத்துக்கள் அனைத்தினதும் உரிமைக்கான உரிமை கோரல் ஆகும். அதன் வெளியீட்டுக்கு அடிப்படை பரிவர்த்தனைகள் காணப்படுவதோடு மோசடி, வட்டி, சூது போன்றவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். Muhammad Bin Rashid Global Center For Endowment Consultancy (MBRGCEC) சுகூக் வக்ஃப் ஷரிஆ-இணக்க அறக்கட்டளை முயற்சியைத் 2017 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இது தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் மனிதாபிமானத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் ஓர் சமூகம்சார் நிறுவனமாகும்.*

*இது துபாயில் உள்ள Awfqaf and Minors Offers அறக்கட்டளை மற்றும் National Bonds Corporation உடன் இணைந்து சுகூக் வக்ஃப் ஷரிஆ-இணக்க அறக்கட்டளை குறித்த முயற்சியை அமுலாக்கம் செய்தது. துபாயின் பிரதமர் ஷேக் முகமது பின் ராஷித் அல் மக்தூமின் தொலைநோக்குப் பார்வையின் வெளிப்பாடாட்டின் விளைவாக குறித்த முயற்சி அமைந்துள்ளது. இது சமூக வளர்ச்சியை முன்னேற்றுவதிலும் பங்களிப்புகளை வழங்குகின்றது (Baktiar et al., 2017).*

*அறக்கட்டளை நிதிகள் மற்றும் பத்திரங்களில் இருந்து AED100 மில்லியன் ஆரம்ப பங்களிப்புடன், இந்த முயற்சியானது நன்கொடை நிதிகளின் நிரந்தர நன்கொடையை அடிப்படையாகக் கொண்டது. இது சொத்துக்களின் முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வதுடன் தொண்டு மற்றும் மனிதாபிமான இலக்குகளை ஆதரிக்கவும் அனுமதிக்கிறது. இதன் உதவித்தொகையின் வருவாய் அரையாண்டுதோறும் மாற்றப்படும். மேலும் துபாய் முழுவதும் உள்ள அவ்காப் மற்றும் அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படும் மனிதாபிமான திட்டங்களுக்கும் செலவிடப்படும் (Lahsen & Raghibi, 2018).*

*இந்த முன்முயற்சியில் நிரந்தர மற்றும் தற்காலிகப் பத்திரங்கள் அவற்றின் விதிமுறைகளைப் பொறுத்து மூன்று வகைகளாகும். ஓராண்டு, மூன்று ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகள் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கக்கூடிய பத்திரங்கள்* 3.5%*வரை எதிர்பார்க்கப்படும் வருமானத்தைக் கொண்டுள்ளன. ஸகாத் இல்லாத நிரந்தர மானியமாக இருந்தாலும் சரி.*

*தனிநபர்கள் AED1,000 முதல் பத்திரங்களை வாங்கலாம். அதே நேரத்தில் நிறுவனங்கள் AED10000முதல் பத்திரங்களை வாங்கலாம். சமூக விவகாரங்கள், சுகாதாரம், கல்வி மற்றும் பொதுத் தொண்டு போன்ற பல்வேறு துறைகளில் நன்கொடையாளரின் விருப்பத்திற்கேற்ப சுகூகக் அல் வக்ஃப் ஆதாயப் பத்திரங்களின் நிதி தொண்டு பங்களிப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் (Lahsen & Raghibi, 2018).*

*வக்ஃபில் பயன்படுத்தப்படும் ஒப்பந்த வகையின் அடிப்படையில் நிதி நிறுவனங்களால் திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாட்டின் அடிப்படையில், சுகூக் பிரிக்கப்பட்டுள்ளது.*

**a)** ***சுகூக் முழாரபா***: *இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினருக்கு இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தமாகும். அதாவது ஒரு தரப்பினர் மூலதனத்தை வழங்குபவராகவும், மற்றொரு தரப்பினர் ஆற்றல் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குபவராகவும் இருப்பர். ஒத்துழைப்பிலிருந்து கிடைக்கும் இலாபம் முன்பு ஒப்புக் கொள்ளப்பட்ட விகிதத்தின் அடிப்படையில் பிரிக்கப்படும். ஆற்றல் மற்றும் உறுப்பினர்களின் அலட்சியத்தால் ஏற்படும் இழப்புகளைத் தவிர, இழப்பானது (நஷ்டம்) மூலதன வழங்குநரால் முழுமையாக ஏற்கப்படும்.*

**b)** ***சுகூகக் முராபஹா:*** *இது ஒரு முராபஹா ஒப்பந்தத்தைக் கொண்ட ஒரு பத்திரமாகும். அங்கு அவர்கள் இருவரும் கையகப்படுத்தல் விலை மற்றும் இலாபத்தை ஒப்புக்கொள்கிறார்கள். விற்பனையாளர் மற்ற தரப்பினரிடமிருந்து பொருட்களை வாங்குகிறார். மற்றும் கொள்முதல் விலை மற்றும் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை அறிவிப்பதன் மூலம் வாங்குபவருக்கு விற்கிறார் (Paldi, 2014).*

**c)** ***சுகூகக் முஷாரகாஹ்:*** *இது ஒரு முஷாரகா ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட ஒரு சுகூக் ஆகும். இதில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் ஒரு புதிய திட்டத்தை உருவாக்க/ ஏற்கனவே உள்ள திட்டத்தை உருவாக்க அல்லது வணிக நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக மூலதனத்தை இணைக்க இணைந்து செயல்படுகின்றனர். பெறப்படும் இலாபங்கள் அல்லது இழப்புகள் பங்கேற்புத் தொகைக்கு ஏற்ப கூட்டாக ஏற்கப்படுகின்றன.*

**d)** ***சலம்***: *சலம் ஒப்பந்தத்தின் மூலம் சில பொருட்களை வாங்குவதற்கான நிதியைப் பெறுவதற்காக சுகூக் சலம் வழங்கப்படுகிறது. இதனால் சலம் பண்ட முதலீட்டாளராக மாறுகிறது (Ahamed et al., 2018).*

**e)** ***சுகூக் இஸ்திஸ்னா:*** *இது ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளியிடப்படுவதாகும். இதில் ஒரு திட்டம் அல்லது பொருட்களுக்கு நிதியளிக்கும் கட்டமைப்பில் விற்றல் மற்றும் வாங்குதலை ஏற்றுக்கொள்கின்ற ஓர் ஒப்பந்தமாகும். பொருட்கள் அல்லது திட்டங்களின் விலை, விநியோக நேரம் மற்றும் விவரக்குறிப்புகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றன (Ahamed et al., 2018)*.

***க) சுகூக் இஜாரா:*** *இஜாரா ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளியிடப்படுவதாகும், அதில் ஒரு தரப்பினர் தனியாக செயல்பட்டு அல்லது அதன் பிரதிநிதி மூலம் ஒரு சொத்தின் நன்மை பயக்கும் உரிமைகளை மற்றொரு தரப்பினருக்கு விற்கும் அல்லது குத்தகைக்கு விடப்பட்ட விலை மற்றும் காலத்தின் அடிப்படையில், சொத்தின்உரிமையை மாற்றாமல் பின்பற்றுவதைக் குறித்து நிற்கிறது (Paldi, 2013).*

***முடிவுரை***

*நவீன கால கட்டத்தில் இந்த வக்ஃப்த் துறையினை மேலும் விரிவாக்கம் செய்யவும், மேம்படுத்தவும் பல்வேறு நவீன வழிமுறைகளை பல நாடுகளும் உருவாக்கி வருகின்றன. அவற்றில் மிக முக்கியமாக பண வக்ஃப் மற்றும் சுகூக் வக்ஃப் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.*


ISBN: 978-624-5736-55-3

சுகூக் வக்ஃப் என்பது உரிமைகளுக்கான ஒரு பத்திரமாகவும் இது இன்றைய நவீன உலகில் வளர்ந்து வருகின்ற மிகப் பாரியதொரு அம்சமாகும். உலகளாவிய அளவில் உள்ள முஸ்லிம் நாடுகளில் இதன் அமுலாக்கம் உள்ளதை காண முடிகிறது. மேலும் நிதி நிறுவனங்களால் திரட்டப்படுகின்ற நிதிகளை பயன்படுத்துகின்ற விதத்தின் அடிப்படையில் சுகூக் வக்ஃப் பல வகைகளாகப் பிரிக்கப்படுவதையும் அதன் பிரிவுகளையும் இவ்வாய்வில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மாற்றமடைந்து வரும் நவீன உலகில் புதிய மாற்றங்களும் தொழில்நுட்பங்களும் வக்ஃபுடைய துறையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## References


Aashiq, A. M. (2019). The Wakf System in Islam and its Application in Sri Lanka[Islathil waqf olungum ilangaiyil adhan nadaimuraiyum] (Faculty of Islamic Studies,South Eastern University of Srilanka, Ed.). http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4013

Abdul Karim, S. (n.d). Contemporary Waqf Administration and Development in Singapore Challenges and Prospects. Islamic Religious Council of Singapore.

Abdullahi, S. I. (2020). Towards the Creation of Strong Brand Image of Waqf Institutions. Challenges and Impacts of Religious Endowments on Global Economics and Finance, 56–71. https://doi.org/10.4018/978-1-7998-1245-6.ch004

Bushra, M. T. F. (2021). Management of Waqf Properties:A study Based on Srilankan Context. Submitted in partioly fulfilment of degree progamme to the faculty of Islamic Studies and Arabic Language.

Cizakca, M. (1997). Towards a Comparative Economic History of the Waqf System. Al-Shajarah: Journal of the International Institute of Islamic Thought and Civilization 2, no.1. ( pp 63-102)

Gandi, A. (2022). Sukuk. Investopedia. Retrieved 2022, from https://www.investopedia.com/terms/s/sukuk.asp
https://islamicmarkets.com/publications/waqf-through-sukuk-al-

Hussein Elasrag (2017). Towards the New Role of the Insitution of Waqf. Munich Personal Repec Archive (MPRA).

Intifa National Bonds. (n.d.). Sukuk Al Waqf. National Bonds.Ae. https://www.nationalbonds.ae/product-details?item=1316849b-ca2f-6f76-bc2c-ff1e005d5b89

Kalid, M., & Kareem, K. A. (2016). Waqf through Sukuk Al Intifa. IslamicMarkets.Retrieved

Lehsen, Raghibi, & Abdessamad. (2018). Sukuk Waqf:the Islamic solutions for public finance deficit. National School Business and Management.

https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://mpra.ub.uni-muenchen.de/85629/1/MPRA_paper_85629.pdf&ved=2ahUKEwjo8cL3uPL3AhX3UGwGHXrrATM4ChAWegQICxAB&usg=AOvVaw2evM4KO6X927xbPydaQ-S8

Musari, K. (2016). Economic Sustainability for Islamic Nanofinance through Waqf - Sukuk Linkage Program : Case Study in Indonesia. International Journal of Islamic Economics and Finance Studies, 2(3), 73–93. https://doi.org/10.12816/0036630

Nurwinsyah & Sri Herianingrum, (2017). The significance of waqf in historical and theoretical studies. Journal of Islamic Economics Science – Vol.1 No. 1: 39-55.

Oubdia, L., & Raghibib, A. (2018). Sukuk-Waqf: The Islamic Solution For Public Finance Deficits. IslamicMarkets.Com. Retrieved 2022, from https://islamicmarkets.com/publications/sukuk-waqf-the-islamic-solution-for-public-finance-deficits-1

Paldi, C. S. (2014). Types of Sukuk. SlideShare. https://www.slideshare.net/CamillePaldi/types-of-sukuk

Patria Yunita. (2021). Cash Waqf Linked Sukuk (CWLS) Model: For Indonesia Sustainable Food Security. Al-Awqaf: Jurnal Wakaf Dan Ekonomi Islam, 13(1), 59–72. https://doi.org/10.47411/al-awqaf.v13i1.96

Saujan, I., & Mazahir, S. (2022). Waqf : History- Theory - Practice - Contemporary Application (M. Jesa Graphics (ed.); First Edit, Vol. 2017, Issue December 2017). Author Published. https://www.researchgate.net/publication/361793458.

Saujan, I., & Mazahir, S. M. M. (2021). Legal and Practical Issues in the Management of Waqf Properties in Sri Lanka. International Journal of Sukuk and Waqf Research, 2(1), 18–31. https://doi.org/10.46281/ijswr.v2i1.1646

Syamsuri, S., Putri, E. R., Zein, A. R., & Handayani, R. (2021). Sukuk Waqf For The Development Of Islamic Educational Institutions. Islamiconomic: Jurnal Ekonomi Islam, 12(1). https://doi.org/10.32678/ijei.v12i1.26